## கோபிசெட்டிபாளையம் நகராட்சி

## 27.10.2022 ந் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

1. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் செப்டம்பர் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது, மன்றத்தீர்மான எண்.282**

2. இந்நகராட்சி உதவிப்பொறியாளர் மற்றும் பொறியாளர் (பொ) அவர்களின் செப்டம்பர் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது, மன்றத்தீர்மான எண்.283**

3. இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் செப்டம்பர் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது, மன்றத்தீர்மான எண்.284**

4. இந்நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் செப்டம்பர் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது, மன்றத்தீர்மான எண்.285**

5. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் வடகிழக்கு பருவமழை காரணமாக கடந்த இரு தினங்களில் 170 .மி.மீ மழை அளவு பதிவாகியுள்ளது. தென் மழையின் காரணத்தினால் மொடச்சூர் நகராட்சி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மத்திய பகுதியில் , மழைநீர் தேங்கியுள்ளது.

மேற்படி பள்ளி வளாகத்தில் உள் கிழக்கு , மேற்கு மற்றும் வடக்கு பகுதிகளில் பள்ளி கட்டிடம் உயர்வாக அமைத்துள்ளது. பள்ளியில் உள் பகுதியில் , மழைநீர் வடிகால் அமைத்து தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்ற நிரந்தர தீர்வு காணும் பொருட்டு , தரைமட்ட தொட்டி அமைத்து திறந்த வெளி நீர்மூழ்கி மின் மோட்டார் குழாய் மூலம் மழைநீரை வெளியேற்ற ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.1,50,000 /– ஆகும் .இச்செலவின தொகையை நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் , மேலும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதிற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்காண் செலவின தொகையை நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளலாம் .

**1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.286**

6. இந்நகராட்சி பகுதியில் 6/2021 முதல் 7/2022 வரை கீழ்கண்டவாறு பணிகள் மேற்கொண்டமைக்கு பணிகளின் சுருக்கம் தினத்தந்தி செய்திதாளில் 04.10.2022 ல் வெளியிடப்பட்டுள்ளது,

இச்செய்தியினை தினத்தந்தி ல் வெளியிடப்பட்டமைக்கு செலவின தொகை ரூ.9639 /– க்கு பட்டியல் பெறப்பட்டுள்ளது. அத்தொகையினை The Daily Thanthi Erode அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அதன் விவரம்

| வ.எண். | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | சாலைப்பணிகள் | ரூ.500.00 |
| 2. | 15வது நிதிக்குழு மானியம் 2020–21 | ரூ.76.65 |
| 3. | 15வது நிதிக்குழு மானியம் 2021–22 | ரூ.153.55 |
| 4. | சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம்2021–2022 | ரூ.65.00 |
| 5. | கலைஞர் நகபுற மேம்பாட்டு திட்டம் 21–22 | ரூ.238.30 |
| 6. | தூய்மை பாரத இயக்கம் (நகர்புறம்) 2021–2022 | ரூ.36.28 |
| 7. | நமக்கு நாமே திட்டம் 2021–2022 | ரூ.232.00 |
| | **பெரு மொத்தம்** | **ரூ.1301.78** |

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம் .
2. மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

**1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.287**

7. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பதிவிலாஸ் வீதி கடை எண். 1 ( வாய்க்கால் வீதி நியாயவிலைக்கடை) வரி விதிப்பு எண். 057/BD01/00040, கோபிசெட்டிபாளையம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், கே,544 அவர்களுக்கு 01.04.2020 முதல் 31.03.2023 முடிய மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழங்கப்பட்டு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேற்படி சங்கத்தின் கூட்டுறவு சார்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் அவர்கள், தனது 12.08.2022 ந் தேதிய கடிதத்தில், மேற்படி கடை மிகவும் பழுதடைந்து மழை நீர் உள்ளே வருவதாலும், பொருட்கள் நனைந்து சேதமடைந்து விடுவதாலும், மேற்படி கடையை 01.08.2022 முதல் கடையினை காலி செய்து நகராட்சி வசம் ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார்கள். மேலும் மேற்படி கடையின் தரைத்தளம் சங்கத்தின் சார்பில் ரூ.14,070/– செலவில் பராமரிப்பு செய்யப்பட்டதாகவும், மேற்படி செலவினத்தினை கடைக்கான வாடகையில் சரிசெய்துகொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது.

வருவாய் ஆய்வர் தனது 19.10.2022ந் தேதிய குறிப்பில், மேற்படி கடையினை 01.08.2022 முதல் நகராட்சி வசம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், நகராட்சியின் அனுமதியின்றி பராமரிப்பு செய்யக்கூடாது எனவும், எனவே மேற்படி செலவினத்தை கடைக்கு செலுத்த வேண்டிய வாடகையில் சரி செய்து கொள்ள வழிவகை இல்லை எனவும், மேற்படி கடைக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை ரத்து செய்து, பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் எனத் தெரிவித்துள்ளார்.

எனவே பதிவிலாஸ் வீதி கடை எண். 1, க்கு ( வரி விதிப்பு எண். 057/BD01/00040) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேற்படி கடைக்கான கேட்பினை 2022 ஆகஸ்ட் மாதம் (01.08.2022) முதல் நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 3060/2016/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**1.கடைவாடகை நிலுவையின்றி வசூல் செய்ய தீர்மானிக்கப்பட்டது**
**2.அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.288**

8. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான உழவர் சந்தை வளாகத்தில் காலியாக உள்ள இடத்தில் நவீன் மீன் விற்பனை அங்காடி அமைத்திட (20 x 15) 300 சதுரடி பரப்பளவிலான காலியிடத்தினை, இவ்வலுலவக செயல்முறை ஆணை, ந.க.எண்.2155/2021/அ3 நாள். 30.12.2021ன் படி, உதவி இயக்குநர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, ஈரோடு அவர்களுக்கு மாத வாடகை

( சேவை வரி நீங்கலாக) ரூ.5,100/- க்கு, 01.01.2022 முதல் 31.12.2024 முடிய மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டது.

மேற்படி மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர், அவர்கள் தனது 30.09.2022 ந் தேதிய கடிதத்தில், மேற்படி காலியிடத்தில் நவீன மீன் விற்பனை அங்காடியின் கட்டுமானப்பணி, மழை மற்றும் இதர சீதோஷ்ண நிலைகளால் பாதிக்கப்பட்டு தாமதமான காரணத்தினால், கட்டுமானப்பணிகள் தற்போதுதான் முழுவதுமாக நிறைவடைந்துள்ளது எனவும், எனவே 01.01.2022 முதல் 30.09.2022 முடிய உள்ள வாடகை தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து, அக்டோபர் 2022 முதல் வாடகை தொகை வசூல் செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

வருவாய் ஆய்வர் தனது 19.10.2022 ந் தேதிய குறிப்பில், மேற்படி மீன் விற்பனை அங்காடியின் கட்டுமானப்பணிகள் செப்டம்பர் மாத இறுதியில்தான் முடிவடைந்துள்ளது எனவும், எனவே உழவர் சந்தை வளாகத்தில் நவீன மீன் விற்பனை அங்காடி அமைப்பதற்காக வழங்கப்பட்ட காலியிடத்தின் வாடகை 01.01.2022 முதல் 30.09.2022 முடிய ரூ.45,900/- ஐ மன்றத்தின் அனுமதி பெற்று நீக்கம் செய்யலாம் எனவும், 01.10.2022 முதல் 30.09.2025 முடிய மேற்படி காலியிடத்திற்கு குத்தகை உரிமம் வழங்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே வருவாய் ஆய்வர் குறிப்பின்படி, மேற்படி உழவர் சந்தை வளாகத்தில் நவீன மீன்விற்பனை அங்காடி அமைப்பதற்காக மீன்வளத்துறைக்கு வழங்கப்பட்ட காலியிடத்திற்கான வாடகை 01.01.2022 முதல் 30.09.2022 முடிய ரூ.45,900/- ஐ நீக்கம் செய்யவும், 01.10.2022 முதல் 30.09.2025 முடிய மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கவும், வரிவிதிப்பு எண். 057/LD02/00046 ஐ நீக்கம் செய்து, புதிய வரிவிதிப்பு ஏற்படுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 2155/2021/அ3)

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.289**

9. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான வளமீட்பு மையத்தில் சேகரித்து வைத்துள்ள மக்காத கழிவுகளில் உள்ளூர் கடைகளில் விற்பனைக்கு ஆகாத மறு சுழற்சிக்கு பயன்படும் கழிவுகளான பிளாஸ்டிக், பேப்பர், அட்டைகள், பாட்டில்கள், கேன்கள், சாக்கு பைகள், பிளாஸ்டிக் சாக்கு பைகள் மற்றும் இதர மக்காத எரியும் தன்மையுடைய கழிவுகளை எடுத்துக்கொண்டு முறைப்படி அப்புறப்படுத்த 21.10.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் டன் ஒன்றுக்கு (ரூ.) |
|---|---|---|
| 1. | M/s. NIW Waste Management Solutions,<br>No. 25, Sastha Nagar,<br>Kuniyamuthur,<br>Coimbatore - 641008 | 670/- |
| 2. | M/s. Srinivasa Associates,<br>10/52, Kambar Street,<br>Vellore - 632004 | 600/- |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள M/s. NIW Waste Management Solutions, No. 25, Sastha Nagar, Kuniyamuthur, Coimbatore - 641008 அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமானது மற்றொன்றைவிட கூடுதலாக கோடிட்டு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால் அந்நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தினை ஏற்று மேற்குறிப்பிட்ட நிறுவனத்தினரிடம் 01.11.2022 முதல் ஓராண்டு காலத்திற்கு கழிவுகளை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2615/2021/எச் 1)

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மன்ற அனுமதியை எதிர் நோக்கி மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**1). அனுமதிக்கப்பட்டது, 2). ஒப்புதல் அளிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.290**

10. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 25462/2022/ SBM 2 நாள். 27.09.2022 இன் தூய்மை இந்தியா திட்டம் 2.0 இன் கீழ் 29.09.2022 மற்றும் 30.09.2022 ஆகிய இரு தினங்களில் டெல்லி Talkotora Stadium – தில் நடைபெற்ற SBM "The Swachh Amrit Mahotsav" சம்பந்தமான கருத்தரங்கில் இந்நகராட்சி துப்புரவு அலுவலர் கலந்து கொள்ள உத்திரவிட்டதன் பேரில் துப்புரவு அலுவலர் திரு. ப. சோழராஜ் மேற்படி கருத்தரங்கில் கலந்து கொண்டு அதற்கான பயண செலவு பட்டியல் ரூ. 25,160/– சமர்ப்பித்துளளார்.

இதற்கான பயண செலவு பட்டியல் தொகையினை SBM 2.0 திட்ட நிதியிலிருந்து பெற்றுக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளதால் பயண செலவு பட்டியல் தொகை ரூ. 25,160/– யை SBM திட்ட நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2007/2022/சி1)

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**SBM திட்ட நிதியிலிருந்து வழங்கிட அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.291**

11. இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள விவரப்படியான பணிகளை செய்வதற்கு 19.10.2022 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பேருந்து நிலையம் (250 LPH) , தாய் சேய் நல விடுதி (250 LPH) , அம்மா உணவகம் (250 LPH) மற்றும் நகராட்சி அலுவலகம் (250 LPH) ஆகிய இடங்களில் குடிநீர் சுத்திகரிப்பு கருவி RO 2022–23 ஆண்டுக்கு பராமரிப்பு பணி செய்தல் | 3,50,000 | **M/s.மாருதி இன்ஜினியரிங் ஒப்பந்ததாரர்** | 0.27 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு . |
| | | | R,மாணிக்கம் ஒப்பந்ததாரர் | 1.12 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4 , விவேகானந்தர் வீதியில் உள்ள சமுதாய கூடத்திற்கு புதிய. ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்தல் | 2,00,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.28 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.25 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 3. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 ராமர் எக்ஸ்டன்சன் 6ல் உள்ள | 1,25,000 | **M/s.எம்.பி.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.15 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொது கழிப்பிடத்தில் Air compressor மாற்றி Submersible motor அமைத்து தண்ணீர் வசதி செய்தல் | | R,மாணிக்கம் ஒப்பந்ததாரர் | 1.89 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 4 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் வார்டு எண்.28 , வாரச்சந்தை வளாகத்தில் ஆடு அடிக்கும் இடத்தில் (Slaughter House) உள்ள ஆழ்துளை கிணற்றை சுத்தம் செய்து புதிய மோட்டார் பெற்று தண்ணீர் வசதி செய்தல் | 65,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.15 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு . |
| | | | M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.24 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 5. | கோபிசெட்டிபைளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21 மணிமேகலை வீதி , வார்டு எண்.26 , சிவசண்முகம் வீதி 2 , தேர் வீதி , வார்டு எண்.28 ஆகிய இடங்களில் உள்ள சிறுமின் விசை பம்ப் தண்ணீர் தொட்டி பழுதினை சரிசெய்து புதிதாக 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டி அமைத்தல் | 35,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.19 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு . |
| | | | M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.64 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 6 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான MUDF Complex ல் கைப்பிடி சுவர் மற்றும் தடுப்பு சுவர் கூரை பராமரித்தல் பணி செய்தல் | 4,50,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.30 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு . |
| | | | M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.10 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 7 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.28 கங்குவார் வீதி மற்றும் வேலப்பன் வீதியில் இரண்டு Pipe Culvert மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 3,00,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.28 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு . |
| | | | M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 8 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28 , முத்து நகரில் நகர்புற நல வாழ்வு மையம் கட்டிடத்திற்கு தண்ணீர் வசதி , சாய்வு தளத்திற்கு கைப்பிடி (Hand rail) , ஜன்னல்களுக்கு MS Grill ஆகிய பணிகள் செய்தல் | 2,50,000 | **M/s.எஸ்.பீ.டி இன்ஜினியரிங் கான்ட்ரேக்டர்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.24 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு . |
| | | | V. தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.29 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஸ்ரீராமபுரத்தில் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடத்தில் Septice tank ல்உள்ள கழிவுகளை அகற்றவும் மேல் மூடியை புதிதாக அமைத்தல் | 1,20,000 | **திரு .K.R.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர்** | 0.25 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு . |
| | | | திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.10 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 10 | கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் காட்டு வலவு , அன்பு நகர் ,நாய்க்கன் காடு மற்றும் வேலப்பன் வீதி ஆகிய பகுதியில் Pipe Culvert அமைத்தல் | 1,00,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.15 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு . |
| | | | M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 11 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி நகர்மன்ற தலைவர் அறையில் 50 எண்ணிக்கையில் பிளாஸ்டிக் சேர் மற்றும் aluminium Ladder விநியோகம் செய்தல் | 65,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.15 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு . |
| | | | M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 12 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான விவேகானந்தர் வீதி பகுதியில் உள்ள நகராட்சி பொது கழிப்பிடத்தில் கழிவு நீர் வெளியேறும் குழாய்களை புதியதாக அமைத்தல் பணி | 3,80,000 | **M/s.எம்.பி.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.15 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு . |
| | | | R,மாணிக்கம் ஒப்பந்ததாரர் | 1.10 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**ந.க.எண். 1982 /2022 /இ1**

<u>அலுவலகக்குறிப்பு :-</u>

**1** மேற்படி பணிகளில் வ.எண்.1–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s. மாருதி இன்ஜினியரிங்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

2 வ.எண்.2–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s. சஞ்சய் எலக்ட்ரிகல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம் .

3 வ.எண்.3–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.எம்.பி.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம் .

4 வ.எண்.4–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s. சஞ்சய் எலக்ட்ரிகல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

5 வ.எண்.5–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s. சஞ்சய் எலக்ட்ரிகல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

6 வ.எண்.6–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s. சஞ்சய் எலக்ட்ரிகல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

7 வ.எண்.7–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s. சஞ்சய் எலக்ட்ரிகல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

8 வ.எண்.8–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.எஸ்.பீ.டி இன்ஜினியரிங் கான்ட்ரேக்டர்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

9 வ.எண்.9–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **K.R. ஆறுமுகம்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

10 வ.எண்.10–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s. சஞ்சய் எலக்ட்ரிகல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

11 வ.எண்.11–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s. சஞ்சய் எலக்ட்ரிகல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

12 வ.எண்.12–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.எம்.பி.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்

**அலுவலக குறிப்பு வரிசை எண்.1,2,3,4,5,6,7,8,9,10,11 மற்றும் 12 (மொத்தம் பன்னிரண்டு) மட்டும் அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.292**

12. இந்நகராட்சியின் வார்டு எண்.13 ல் தினசரி சந்தை வளாகத்தில் அமைந்துள்ள பொது கழிப்பிடம் பயன்படுத்த முடியாத வகையில் உள்ளது.எனவே அதனை பழுது நீக்கம் செய்து புதுப்பிக்க (Replacement lens , Urinals , septic tank , outlet &slab ) ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,00,000 /– இச்செலவினத்தை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2206/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்காண் செலவின தொகையை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம் .

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.293**

13. இந்நகராட்சி பகுதியில் வீடு வீடாக கழிவுகள் சேகரிக்கும் பணிக்கு உபயோகப்படுத்தப்படும் பேட்டரியினால் இயங்கும் வாகனங்களுக்கு பழுதடைந்த சார்ஜர்களை மாற்றி புதியதாக சார்ஜர்களை பொருத்தி கொள்ளும் பணிக்கு 10.10.2022 இல் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனங்களின் விபரம் | விலைப்புள்ளி தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | M/s. EGS எலக்ரிக்கல்,<br>மொடச்சூர்,<br>கோபிசெட்டிபாளையம் | 9,925/– |
| 2 | M/s. அபிராமி எல்க்ட்ரிக்கல்,<br>கரட்டடிபாளையம்,<br>கோபிசெட்டிபாளையம். | 9,845/– |
| 3 | M/s. ஸ்ரீ வாரி எலக்ட்டிரிக்கல்,<br>பச்சை மலை ரோடு,<br>கரட்டூர்,<br>கோபிசெட்டிபாளயம். | 9,750/– |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி விலை விகிதம் ரூ.9,750/– ஐ அளித்துள்ள வரிசை எண். 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமான M/s. ஸ்ரீ வாரி எலக்ட்டிரிக்கல், பச்சை மலை ரோடு, கரட்டூர், கோபிசெட்டிபாளயம். அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1967/2022/எச் 1)

**அலுவலக் குறிப்பு** : அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைவான விலைப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய நிறுவனத்தினரிடம் பணிமேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம் .

**M/s ஸ்ரீ வாரி எலக்ட்ரிக்கல்–ன் விலைப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**முன் அனுமதி அங்கீகரிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.294**

(ஒப்பம்) – என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

// உண்மை நகல் உத்திரவு படி//

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி